வில்லை. இருந்தாலும் எஸ்டிமேட் கமிட்டிகூட இதுபற்றி சிபார்சு செய்திருப்பதால் இதுபற்றி வருவாய்த்துறையுடன் அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

திரு கெ. இர. ஞானசம்பந்தன்: மோகினிப் பணம் என்று இருப்பது போல ரம்பைப் பணம், ஊர்வசிப் பணம் என்று இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினருடைய கற்பனையை விரித்துக்கொண்டே போவது நல்லதல்ல.

திரு என். மருதாசலம்: மோகினிப் படி எந்த எந்தக் கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதுபற்றிய விவரம் தற்போது இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: ஸ்ரீரங்கநாதர் மோகினி வேஷம் போட்டுக்கொண்டதால் மோகினிப் படி கொடுக்கப்படுகிறது என்பதனால் இதை வைஷ்ணவக் கோயில்களுக்கு மட்டும் கொடுப்பதுபற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ரங்கநாதர் பெண் வேஷம் போட்டு சிவனைத்தான் மயக்கினார். ஆகவே சிவன் கோயில்களுக்கும் கொடுக்கலாம். (சிரிப்பு.)

தீ விபத்துக்களினால் இழப்பு

* 223—வினா. **திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1957 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் தீப்பிடித்துபற்றி எரிவதன் மூலமாக வருடா வருடம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

(இ) அதற்காக சர்க்கார் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) 1957-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்கு, தீ விபத்துக்களின் காரணமாக இழக்கப்பட்ட தொகையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட இடர் உதவித் தொகையும்பற்றிய புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.	தீ விபத்துக்களின் காரணமாக இழக்கப்பட்ட தொகை. ரூ.	அளிக்கப்பட்ட இடர் உதவித் தொகை. ரூ.
1957	12,55,346	1,96,569
1958	6,84,074	1,25,917
1959	7,25,361	2,77,743
1960	11,04,392	4,06,893
1961	10,20,182	3,55,428
1962	12,54,688	2,97,852
1963	16 01,411	3,22,230
1964	20,74,599	3,68,448
1965	53,18,343	5,70,512
1966	27,79,158	3,56,061
மொத்தம்..	1,78,17,554	32,78,653

1968 மார்ச் 15]

இப்படி கடந்த பத்தாண்டுகளில் தீ விபத்துக்களின் காரணமாக மொத்தம் 1,78,17,554 ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை கடந்த பத்தாண்டுகளில் மொத்தம் ரூ. 32,78,653 ஆகும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்தக் கோடிக்கணக்கான ரூபாய்கள் எல்லாம் அரசாங்க அதிகாரிகள் கொடுக்கக்கூடிய புள்ளி விவரம். அது எந்த அளவுக்குச் சரி அல்லது சரியல்ல என்பது வேறு விஷயம். ஆகவே இப்பேர்ப்பட்ட ஏழை மக்களுக்கு ஆறில் ஒரு பகுதி அல்லது ஏழில் ஒரு பகுதி கொண்ட நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது. இது போன்று மேலும் தீ விபத்துக்கள் ஏற்படாத அளவுக்குத் திட்டமிட்டு தீ அணைப்பு நிலையங்களை அதிகப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புதிய அரசு வருவதற்கு முதலிலே கேஷ் கிராண்ட் ஆக 30 ரூபாயும் துணிமணிகளுக்காக 10 ரூபாயும் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது புதிய அரசின் ஆணைப் படி குடிசைகளைச் சீரமைத்துக்கொள்வதற்காக கொடுக்கப்பட்ட 30 ரூபாய் 60 ரூபாயாகவும், துணிமணிக்காகக் கொடுக்கப்பட்ட 10 ரூபாய் 20 ரூபாயா கவும் உயர்த்தப்பட்டு முன்னால் 40 ரூபாயாகக் கொடுக்கப்பட்டது இப் பொழுது 80 ரூபாயாக ஆக்கிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் பல இடங்களிலே ஏற்படுகின்றன. கிராமங்களிலே அஜாக்கிரதை காரணமாக ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கும் பெரு நகரங்களிலே ஏற்படுகின்றவற்றைத் தடுக்கவும் தமிழக அரசு எடுத்துக்கொண்டு வருகின்ற முயற்சிகளை இந்த மன்றம் அறியும்.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை எத்தனை தீ விபத்துக்கள் நடந்தன என்ற புள்ளி விவரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1957 முதல் 1966-ஆம் ஆண்டு வரை மொத்தம் 20,803 தீ விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: தீ விபத்துக்களினாலே நஷ்டம் அடைந்தவர் களுக்கு உதவித் தொகை என்ன அடிப்படையில் அளிக்கப்படுகிறது? நஷ்டத்தில் எவ்வளவு சதவீதம் அளிக்கப்படுகிறது என்பதற்கு விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக மாத வருமானம் 50 ரூபாய்க்கு குறைவாக வருகிறவர்களுக்கும் 10 ரூபாய்க்குக் குறைவாக கந்தாயம் கட்டுகிறவர்களுக்கும் அந்த அடிப்படையில்தான் ஏழை மக்க ளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி: சென்னையில் தீ விபத்துக்களினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்போவதாகச் சொல்லப்பட்டதே அது எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

திரு. ப. மகாதேவன்: நெருப்புப் பிடித்து வீடுகள் எரியும்பொழுது ஏழை மக்கள் வைத்திருக்கக்கூடிய ரூபாய் நோட்டுக்கள் 100 ரூபாய் நோட்டுக்கள்கூட சில சமயங்களில் எரிந்துவிட்டால், அவற்றில் நம்பர் இருக் கும்படியான நிலைமை இருந்தால்கூட ரிசர்வ் பாங்கில் கொடுத்தால் ஈடு செய்ய முடியாத நிலைமை இருக்கிறதே, அதற்கு ஈடு செய்ய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: குறிப்பிட்ட சம்பவங்களைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் சர்க்கார் தன்னாலான உதவியைச் செய்யும்.

[1968 மார்ச் 15

திரு. ஜே. எஸ். இராசு: தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்காக ஏற்கனவே தக்காவி பணத்திலிருந்து கொடுக்கப்பட்டது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, அதுபோன்று மீண்டும் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சீமைச்சாமி அவர்கள் கேள்விக்குச் சொன்ன பதிலையே இதற்கும் சொல்கிறேன்.

திரு. டி.எஸ். ஆதிமூலம்: உதவித் தொகை 40 ரூபாயை 80 ரூபாய் ஆக்கியிருப்பது நல்ல அம்சம்தான். இருந்தபோதிலும் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள்தான், அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்தாலும் அதற்காக ரெவின்யூ அதிகாரி ஒருவரைப் போட்டு பாதிக்கப்பட்டவை எவ்வளவு என்று அஸெஸ்மெண்ட் கணக்கு எடுத்து அதிலிருந்து கணிசமான தொகை கொடுப்பதற்கும் அரசாங்கம் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு தக்காவிலோன் என்ற முறையிலே கடன் வாங்கி சீர்திருத்திக்கொள்ளலாம்.

திரு. ரா. ராமச்சந்திரதுரை: துணைத் தலைவர் அவர்களே, தீ விபத்து ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு தொகையை விட, புயலால், மழையினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு குறைவாக, அதில் பாதியாகத்தான் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? தீ விபத்து ஏற்பட்டதினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகையையே அவர்களுக்கும் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

(பதில் இல்லை)

திரு. வி. டி. அண்ணாமலை: தீ விபத்துக்கள் கிராமப் பகுதிகளிலே நேர்டுகின்ற காரணத்தினாலே, சென்னையிலே வீடு கட்டிக்கொடுப்பதைப் போல கிராமங்களிலும் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

(பதில் இல்லை)

திரு. வி. எஸ். கோவிந்தராஜன்: தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் 50 ரூபாய் வருமானத்திற்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருந்தால் உதவித் தொகை அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். 50 ரூபாய் என்பது மிகவும் குறைந்ததாக இருக்கிறது. அப்படிக் குறைந்திருப்பதால் பலர் உதவியைப் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 50 ரூபாய் என்று விதிமுறை இருக்கிறது. அதைப்பற்றி பரிசீலிக்கின்ற நேரத்திலே அதிகாரிகள் தாராளமாக நடந்துகொள்ளுகிறார்கள்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம்

*224. வினா.—திரு. கரு சீமைச்சாமி :
திரு.கே. விநாயகம் :
திரு. க. இராமமூர்த்தி :
திரு. ஆர். கருப்பையா :
} மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வருவதை கொள்கையளவில் சென்னை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?